# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

**2018**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **20** ம் நாள் காலை **11.00** மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 20.4.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ந. சுந்தரலிங்கம் என்பவரின் **12.03.2018**ம் நாளைய விண்ணப்பத்தில் தனது வயதான பெற்றோரின் உடல் நிலையினை கண்காணிக்கவும் மற்றும் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தன்னை காயல்பட்டினம் நகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதல் செய்து கொடுக்க ஆவண செய்யுமாறு கோரியுள்ளார். இவரது மேற்படி ஒரு வழி பணிமாறுதல் தொடர்பாக முடிவு செய்ய மாமன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>**1)** இதே போன்ற தீர்மானம் காயல்பட்டினம் நகராட்சி மன்றத்தில் நிறைவேற்றி அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மூலம் கருத்தரு அனுப்பிட ஏதுவாக தீர்மானம் நிறைவேற்ற மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>**2)** இவர் தனது சொந்த விருப்பத்தின்படி ஒரு வழி பணிமாறுதல் கோரியுள்ளதால் இதற்கான பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்க ஏதுவாக கருத்துரு அனுப்பி வைக்கவும் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>சி2/1088/2018 | **69)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த **2000** (இரண்டாயிரம்) தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியும், மேலும் இப்பணியினை இதற்கு முன்பு பார்த்து வந்த மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் என்ற நிறுவனத்திடம் மேற்கொள்ள அனுமதியும், அதற்காகும் செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்**2.11648/10** | **70)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசு மற்றும் பூச்சிகளை ஒழிக்கக்கூடிய BT (Bacillus thuringiensis Var Israelensis) என்கிற மருந்து தற்போது மிகக் குறைந்த அளவே உள்ளது. எனவே, மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளுக்கும் கழிவு நீரில் உற்பத்தியாகும் கொசு மற்றும் பூச்சிகளை ஒழிக்கக்கூடிய BT மருந்து தேவைப்படுவதால், Tamilnadu Medical Services Corporation Ltd. Chennai அவர்களின் அனுமதி பெற்ற M/s. Biotech International Limited நிறுவனமாகிய தங்கள் நிறுவனம் மூலம் ஒரு கிலோ ரூ. 1082.76 (Plus GST @ 18% Rs. 194.89=Rs.1277.65) வீதம் 1000 கிலோ வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | 71) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 4) இம்மாநகராட்சி தூத்துக்குடி நகராட்சியாக செயல்பட்ட பொழுது சுகாதாரப்பிரிவில் துப்புரவுப் பணியாளர்களாக பணிபுரிந்து வந்த பணியாளர்கள் வயது முதிர்வு மற்றும் பிற காரணங்களால் பணியிலிருந்து ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலியாக இருந்து வருகிறது.<br>தூத்துக்குடி நகராட்சியானது மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய கிராம பகுதிகளை ஒன்று இணைத்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br>இம்மாநகராட்சி பகுதியானது 60 வார்டுகளை உள்ளடக்கி வடக்கு, கிழக்கு மேற்கு மற்றும் தெற்கு என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாலும், மக்கள் தொகையினை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதன் அடிப்படையிலும் போதிய பணியளார்கள் பொது சுகாதா பணிகளுக்கென்று இல்லை என்பதால் இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செம்மையாகவும் திறம்படவும் மேற்கொள்ள இயலவில்லை.<br>எனவே இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செம்மையாகவும் திறம்படவும் மேற்கொள்ள தற்போது உள்ள 225 பணியாளர்கள் போக அரசாணை எண். 101 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 30.04.1997ன்படி 696 பணியாளர்கள் தேவை என கணக்கிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை கூடுதலாக அமர்த்திக்கொள்ளவும் இதற்கான செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்பட்டது.<br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை K.Dis.No.24100/P3/2017 நாள் 31.10.2017ல் 630 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை கூடுதலாக அமர்த்திக்கொள்ள அனுமதியளித்து உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து கிழக்கு மற்றும் மேற்கு | 72) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மண்டலங்களுக்கு முறையே 150 பணியாளர்கள் வீதம் மொத்தம் 300 பணியாளர்களுக்கு 21.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 330 பணியாளர்களை மகளிர் சுய உதவி குழுக்கள் கூட்டமைப்பின் (Area Level Federation) மூலம் 07.02.2018 முதல் மன்ற அனுமதி எதிர் நோக்கி பணியமர்த்தப்பட்டது. மேலும் 6 மாதத்திற்கு பணியமர்த்திக் கொள்ளவும் பணியாளர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ 2,00,00,000/– (இரண்டு கோடி மட்டும்) க்கும் சீருடைய பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் தளவாடச் சாமான்களுக்கான உத்தேச செலவுத்தொகை ரூ.4,00,000/– (நான்கு இலட்சங்கள் மட்டும்) கும் மன்ற அனுமதியை எதிர் நோக்கி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்1/1302/2018 | |
| | 5) இம்மாநகராட்சி பகுதியில் JICA நிதி உதவியின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ. 282.44 கோடி மதிப்பீட்டிற்கு அரசாணை எண். (4D) 10–3 M.A & W.S. Department (Mc6) நாள் 22.10.2012ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிகள் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி தலைமைப் பொறியாளர் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அலுவலக செயல்முறை ஆணை எண். 45619/2012/002 நாள் 06.12.2012ல் பெறப்பட்டது. மேற்படி சிப்பம் பணிகளில் சிப்பம் 1 பணியான மருதூர் அணைக்கட்டு பகுதியில் Rain water Intake well, staff quarters, EB Panal Room, pumping main and water Treatment plant அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 53.01 கோடி ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள M/S. L & T Constructions நிறுவனத்திற்கு மதிப்பீடு தொகையில் 23.30 % அதிகம் என்ற விலை விகிதத்தில் ஒப்பந்த தொகை ரூ. 55, 79, 41,500/– ஆகும்.<br>மேற்படி பணிகள் மேற்கொள்ளும்போது பணிகள் அவசியம் கருதியும், தொழில்நுட்ப அலுவலர்களின் நேரடி ஆய்வின் போது தெரிவித்துள்ள அறிவுரையின் பிரகாரமும் மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கூடுதல் இனங்கள் மேற்கொள்ளப்பட்டதில் பணியின் மொத்த மதிப்பீடு தொகை மூல மதிப்பீட்டினை விட கூடுதல் ஆகின்றது. தற்பொழுது மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு தொகை ரூ 68.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடு தொகைக்கு மாமன்றம் கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>அ)திருத்திய மதிப்பீடு தொகை ரூ 68.00 கோடியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி பணிக்கு கூடுதல் ஆகும் தொகையினை திட்டத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த மதிப்பீடு தொகை ரூ. 282,44 கோடியில் இருந்து மீதமாகும் தொகையில் இருந்து ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | 73)அலுவலகக் குறிப்பு அ , ஆ மற்றும் இ அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இ) திருத்திய மதிப்பீடு தொகைக்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி கோரி தலைமைப் பொறியாளர், சென்னை, நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களை கோர மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தற்போது கோடைக்காலமாக உள்ளதால் மாநகராட்சி பகுதிக்கு ஆதாரமான தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைவாக உள்ளது மேலும் தாமிரபரணிக்கு தண்ணீர் வழங்கும் பிரதான அணையான பாபநாசம் அணையில் 20 அடிக்கும் குறைவாக தண்ணீர் உள்ளது. எனவே மாநகராட்சி பகுதியில் வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்நோக்கி மாநகராட்சி கிழக்கு மண்டல பகுதியில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 21.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>இம்மதிப்பீட்டின்படி இச்செலவின தொகைகளை குடிநீர் நிதியில் இருந்து செலவுகள் மேற்கொள்ளவும் தேவைப்படின் துறைத் தலைமையில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பணியின் அவசியம் கருதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/01346/2018 | 74) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தற்போது கோடைக்காலமாக உள்ளதால் மாநகராட்சி பகுதிக்கு ஆதாரமான தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைவாக உள்ளது மேலும் தாமிரபரணிக்கு தண்ணீர் வழங்கும் பிரதான அணையான பாபநாசம் அணையில் 20 அடிக்கும் குறைவாக தண்ணீர் உள்ளது. எனவே மாநகராட்சி பகுதியில் வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்நோக்கி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதியில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 20.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>இம்மதிப்பீட்டின்படிஇச்செலவின தொகைகளை குடிநீர் நிதியில் இருந்து செலவுகள் மேற்கொள்ளவும் தேவைப்படின் துறைத் தலைமையில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பணியின் அவசியம் கருதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/01347/2018 | 75) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தற்போது கோடைக்காலமாக உள்ளதால் மாநகராட்சி பகுதிக்கு ஆதாரமான தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைவாக உள்ளது. மேலும் தாமிரபரணிக்கு தண்ணீர் வழங்கும் பிரதான அணையான பாபநாசம் அணையில் 20 அடிக்கும் குறைவாக தண்ணீர் உள்ளது. எனவே மாநகராட்சி பகுதியில் வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்நோக்கி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதியில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் | 76) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | விநியோகம் செய்ய ரூ. 23.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>இம்மதிப்பீட்டின்படி இச்செலவின தொகைகளை குடிநீர் நிதியில் இருந்து செலவுகள் மேற்கொள்ளவும் தேவைப்படின் துறைத் தலைமையில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பணியின் அவசியம் கருதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/01348/2018 | |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தற்போது கோடைக்காலமாக உள்ளதால் மாநகராட்சி பகுதிக்கு ஆதாரமான தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைவாக உள்ளது. மேலும் தாமிரபரணிக்கு தண்ணீர் வழங்கும் பிரதான அணையான பாபநாசம் அணையில் 20 அடிக்கும் குறைவாக தண்ணீர் உள்ளது. எனவே மாநகராட்சி பகுதியில் வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்நோக்கி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதியில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 44.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>இம்மதிப்பீட்டின்படி இச்செலவின தொகைகளை குடிநீர் நிதியில் இருந்து செலவுகள் மேற்கொள்ளவும் தேவைப்படின் துறைத் தலைமையில் இருந்து நிதி பெற்றுக்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>பணியின் அவசியம் கருதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/01349/2018 | 77) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது, |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சியில் பணியாற்றும் பகுதி சுகாதார செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள் ஆகியோர்களுக்கு அரசாணை எண். 236 நாள் 01.06.2009ன் படி 2018ம் வருடத்திற்கு சீருடைப்படி வழங்குவதற்கு நகர சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ.750/— வீதம் 17 நகர சுகாதார செவிலியர்களுக்கு ரூ 12750/—ம் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடையப்படியாக தலா ரூ. 1200/— வீதம் 4 பகுதி சுகாதார செவிலியர்களுக்கு ரூ 4800/—ம் ஆக மொத்தம் ரூ. 17550/—னை பகுதி/நகர சுகாதார செவிலியர் களுக்கு வழங்கவும், மேற்படி தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப் படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/1034/18 | 78) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது, |
| | 11) முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, அவர்களின் தலைமையில் 01.09,2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநில உயர்மட்டகுழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண். 11ல் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நுண் உரங்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் மேற்கொள்ளஅனுமதியளித்துள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் எண்.88 நாள் | 79)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 06.10.2017இல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத்தீர்மானப்படி வார்டு எண். 34 பாளை ரோடு மேற்கு 3வது மைல் பக்கிள் ஓடை பகுதியில் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு கட்டுமான பணி மேற்கொள்ள முற்பட்டபோது, மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் கட்டுமான பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டது.<br>மேற்படி பகுதியினை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள் பாளைரோடு 3வது மைல் பக்கிள் ஓடை பகுதியில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், மேற்படி நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணியினை அதே மதிப்பீட்டில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான கதிர்வேல்நகர் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண். LP/DTCP No. 1214/94 ல் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடத்தில் நுண்உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** . மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/1158/2015 | |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சியானது நகராட்சியாக செயல்பட்டு வந்த காலக்கட்டத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்காக IDSMT 2004-05 திட்டத்தின் கீழ் கடனாக ரூ.92,00,000/– (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சம் மட்டும்) நகர் ஊரமைப்புத் திட்ட இயக்குநரகம் சென்னை வாயிலாக பெறப்பட்டது. நகராட்சியாக செயல்பட்டு வந்த காலகட்டத்தில் பணியாளர்களின் ஊதியம் நகராட்சியின் அப்போதைய அவசியமான வளர்ச்சி பணிகளுக்கான பட்டியல் தொகை வழங்குதல் மற்றும் அன்றாட நிர்வாக செலவினங்கள் மேற்கொள்வதற்கு மட்டுமே போதுமானதாக இருந்து வந்ததன் பொருட்டு நிதி நிலை பற்றாக்குறை காரணமாக மேற்படி கடன் தொகையில் இரண்டு தவணைகளில் மொத்தம் ரூ. 24,50,128/– மட்டுமே இதுவரை செலுத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் தொகையானது 31.03.2018 முடிய உள்ள காலத்திற்கு ரூ. 5,85,99,932/– அசல் மற்றும் வட்டியுடன் நிலுவையில் உள்ளதாக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி கழக நிறுவனத்தால் 04.04.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.<br>தற்போது நகராட்சி நிலையில் இருந்து 2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதனை தொடர்ந்து கடந்த 2011ல் மாநகராட்சிக்கு அருகாமையிலுள்ள 5 கிராம ஊராட்சிகள் மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு 60 வார்டுகள் கொண்ட விரிவாக்கம் செய்யப்பட்டு மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை அடிப்படையாக கொண்டே பல்வேறு அத்தியாவசிய வளர்ச்சிப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பொது சுகாதாரப் பணிகள், பணியாளர்களின் ஊதியம் நிர்வாகச் செலவினங்கள் தவிர மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் | 80) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | உள்ளிட்ட அனைத்து வகையான செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கடனாக பெறப்பட்ட ரூ **92,00,000/–**க்கு இன்றைய நாளில் அதற்கான வட்டி மற்றும் அபராதக் கட்டணம் சேர்த்து செலுத்தக் கோரும் கேட்பான ரூ. **5,85,99,932/–** ஆனது மிகவும் அதிகமாகவும் இம்மாநகராட்சியால் செலுத்த இயலாத ஒரு தொகையாகவும் உள்ளது.<br>இம்மாநகராட்சியின் தற்போதைய வருவாய் அத்தியாவாசிய வளர்ச்சி பணிகள், குடிநீர் பராமரிப்பு, ஊதியம், ஓய்வூதியம் இதர கடன்கள் செலுத்துதல் மற்றும் அன்றாட செலவினங்களை மேற்கொள்வதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. எனவே தற்போதைய இம்மாநகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ **24,50,128/–** தவணை தொகையினை தவிர்த்து வட்டி மற்றும் அபராத கட்டணங்களை தள்ளுபடி செய்து அசல் கடன் தொகையான ரூ. **9200000/–**ஐ ஒரே தவணையில் செலுத்துவதற்கு ஏதுவாக அரசின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக உரிய பிரேரணை அனுப்பிட மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>IDSMT 2004-05 கடனுக்கான வட்டி மற்றும் அபராத கட்டணம் தள்ளுபடி செய்திடவும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு என இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூ. **9200000/–** மட்டும் ஒரே தவணையில் செலுத்த அனுமதி கோரி அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக உரிய கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>பி1/26801/1985 | |
| | **13)** திருச்சி மாநகராட்சியிலிருந்து பணியிடம் மாற்றம் செய்யப்பட்டு இம்மாநகராட்சியில் உதவி ஆணையர் (பணியாளர்) பணியிடத்தில் பணிபுரிந்து வரும் உதவி ஆணையர் (பணியாளர்) அவர்களுக்கு இவ்வலவலக தொடர்புடைய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அலுவலர்களுக்கென போதிய வாகனம் இல்லாததால் ஏற்கனவே மாநகர் நல அலுவலர் அவர்களின் பயன்பாட்டிற்கு மாதவாடகைத் தொகை ரூ.**30000/–** (முப்பதாயிரம் மட்டும்)ற்கு ஓர்வாகனம் அமர்த்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதால் அதே வாடகை விதித்தில் உதவி ஆணையர் (பணியாளர்) அவர்களுக்கு மன்ற அனுமதியை எதிர் நோக்கி ஓர்வாகனம் அமர்த்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதற்கும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ. **2,00,000/–** (இரண்டு இலட்சங்கள் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/1435/2018 | **81)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது, |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் **20.04.2018**